## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் ''சபை'' நிதிக்கூற்றுக்கள் மற்றும் சபை மற்றும் அதன் நிருவகிப்பதினதும் (''தொகுதி'')திரண்ட நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சபையின் மற்றும் அதன் தொகுதியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் (SLFRS) 25ஆம் பிரிவிற்கு அமைய நிறுவனங்களினால் அனைத்து நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புகள் குறித்து | மத்திய வங்கியின் திறைசேரி முறி மற்றும் நாணயக் கடிதங்கள் முதிர்ச்சியடையும் வரை தக்கவைத்துக் கொள்ளப்பட்ட நிதி முதலீடு , என கொள்ளப்பட்டமையால் அதற்குரிய சாதாரண பெறுமதி வெளிப்படுத்தப்படாததுடன் எதிர்வரும் காலங்களில் | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதி சொத்துக்களிள் சாதாரண பெறுமதியை வெளிப்படுத்நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேறிய பெறுமதி மற்றும் ஒப்பிடுதலுக்கு ஏற்றவாறான சாதாரண பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 09 (SLFRS 9) இற்குஅமைய காலக்கழிவு செய்யப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் வைத்துக்கொள்ளப்பட்ட நிதி சொத்துக்கள் (Financial Assets at Amortized cost) பகிர்ந்தளிக்கப்பட்ட செலவுக்கு அறிக்கையிடப்பட வேண்டும் எனினும் சபையினால் ரூபா 61,191 பெறுமதியான சொத்துக்கள் செலவுக்கு அறிக்கையிடப்படவில்லை. | மத்திய வங்கியின் திறைசேரி முறியானது, அரசினால் பிணை வைக்கப்பட்ட நிதி கருவி என்பதால் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தம் அரச திறைசேரி முறி மீது முதலீடு செய்யப்படுவதாலும் கெரவலபிட்டிய முறியும் அரசினால் பிணை வைக்கப்பட்ட நிதி கருவி என்பதாலும் அதற்கான காலக்கழிவு (Impairment) உரித்தானதல்ல. மீள் நிதியிடல்வசதி என நடத்தப்படும் NDB, SMIB வங்கி மூலம் வழங்கப்படும் வீடமைப்பு நிதி வசதி குறித்து உரிய காலக்கழிவினையும் எதிர்வரும் காலங்களில் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய அனைத்து ஊழிய கடன் ஒரு வருடத்திற்கு குறைந்த காலத்தினுள் செலுத்த நடவடிக்கை எடுக்கும் காரணத்தினால் அதற்காக காலக்கழிவு ஏற்புடையதல்ல. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிலைமாறும் செலவு குறித்து வைத்துக்கொள்ளப்பட்ட நிதி சொத்துக்கள் நிலைமாறும் செலவுக்கு அறிக்கையிடப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 (LKAS 08) இனு் 28 ஆம் பிரிவுக்கு அமைய , 2018 ஜனவரி 01ஆம் திகதி நடைமுறைப்படுத்திய இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 09இன் கீழ் செய்யப்படவேண்டிய வெளிப்படுத்தல்கள் சபையினால் வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்வரும் காலங்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் கீழ் செய்யப்படவேண்டிய வெளிப்படுத்தல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 (LKAS 16) படி சாதாரண பெறுமதியை காட்டுவதற்கு சொத்து | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 30ஆம் பிரிவுக்கமைய சபையின் ஆதனங்களும், இயந்திரங்களும், | சபையின் சொத்துக்களின் நியாயப் பெறுமதியை காட்டுவதற்கு சொத்து மதிப்பீடு ஒன்று செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மதிப்பீடு செய்வது எவ்வாறு என்ற போதிலும், 2018 டிசம்பர் 31 திகதிக்கு சபையின் செலவு ரூபா 502,896,000 ஆன அசையா சொத்துக்களினுள் 25 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து குறைந்து செல்லும் பெறுமதியின் கீழ் தேய்மானம் செய்யப்பட்ட சொத்தாக இருந்தாலும் அச்சொத்துக்களை மதிப்பீடு செய்வது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | உபகரணங்களினதும் செலவு மாதிரியின் (Cost Model) கீழ் கணக்குவைக்கப்படுவதால் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 34ஆம் பிரிவு ஏற்புடையதல்ல. இது தொடர்ச்சியாக 37 வருடம் பாவிக்கப்பட்டுள்ளது. |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் சேவை வழங்கும் நிறுவனங்களின் 1981 ஆம் ஆண்டிலிருந்து 2017 டிசம்பர் 31 வரையான காலப்பகுதியினுள் அறவிடப்பட்ட தொகை ரூபா 2,002,707,920 ஆன பங்களிப்பு தொகை, நிதிய சட்டத்தின் 16 ஆம் பிரிவின் படி அந்தந்த உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 1981 ஆம் ஆண்டிலிருந்து 2017.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் சந்தா பணமாக ரூபா.மில்லியன் 196,948 கிடைத்துள்ளதுடன் 2019.05.30 திகதிக்கு ஒவ்வொரு உறுப்பினர்களின் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது தொழில் வழங்குநர்கணக்குகளில் தக்க வைத்துள்ள உறுப்பினர்களின் பணப்பெறுமதி ரூபா 1,519 மில்லியன் ஆகும். இப்பெறுமதியானது பெறப்பட்ட உறுப்பினர் தொகையின் சதவீதமாக நோக்குகையில் 0.77%ஆகும்.<br><br>மேலும்தொழில் வழங்குநரின்சேவை விபரங்களை வழங்காமை, சில நிறுவனங்களுக்கான உறுப்பினர் தொகையை ஒரே காசோலையினால் செலுத்தும் போது ஆய்யுக்குட்படுத்தும் விதம் தெளிவின்மை, நிறுனத்தினால் வழங்கப்படும் அரையாண்டு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட தரவு | சந்தா பணம் செலவு வைக்கப்படவேண்டிய உறுப்பினர்கள் சரியாக மற்றும் சிரமத்துடன் இனங்காணக்கூடியவாறு சந்தாபணம் அறவிடும் முறையை விருத்தி செய்ய மற்றும் இனங்காணப்படாத சந்தா பணத்தை விரைவாக இனங்காண நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

தெளிவின்மை எனும் பல்வேறு காரணங்களினால் உறுப்பினர் கணக்குகளில் சந்தா பணம் செலவு வைப்பது தாமதமானது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 1954 இல 19 கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | மேலதிக நேரத்திற்கு கொடுப்பனவு செய்யும் போது ஒரு மேலதிக நேர மணித்தியாலத்திற்கு சாதாரண மணித்தியால சம்பளத்தின் ஒன்றரை பங்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் சபையினால் சனி/ஞாயிறு தினங்களில் 8 மேலதிக நேர மணித்தியாலங்கள் பூர்த்தியாவதுடன், மேலதிக நேர கொடுப்பனவுக்கு மேலதிகமாக ஒரு நாள் சம்பளமும் சேர்த்து மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் இவ்வாண்டின் மேலதிக நேர செலவு ரூபா 18,615,000 ஆக இருந்தது. மேலும் சட்டத்திற்கு அமைய மேலதிக நேர கொடுப்பனவு பெற சபையின் உத்தியோகத்தர்கள் வாரத்திற்கு 5 ½மணித்தியாலங்கள் சேவை செய்ய வேண்டியதுடன் வருடாந்த விடுமுறை 21இற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அதற்கு எதிர்மாறாக வருடாந்த விடுமுறை 42 மட்டும் | சபை ஸ்தாபிக்கப்பட்ட காலம் முதல் ஒரு மேலதிக நேர மணித்தியாலத்திற்கு 1 ½ மணித்தியாலம் படி மேலதிக நேர கணிப்பு செய்யவும் அதற்கு மேலதிகமான 8 மணித்தியால சேவைக்கு ஒரு நாள் சம்பளமும் செலுத்தப்பட்டு வந்துள்ளது. அதற்கமைய கடந்த 37 வருடமாக கடைப்பிடிக்கப்பட்ட முறையை மாற்றுவது, தொழில் அமைதி சீரகுலைய காரணமாகலாம் என குறிப்பிடுகிறேன். கடை மற்றும் காரியாலய சட்டமத்திற்கமைய மேலதிக நேரம் கணிப்பீடு செய்வதற்கு வாரத்திற்கு 45 நாள் சேவை | கடை மற்றும் காரியாலய சட்டத்திற்கு உட்படும் நிறுவனங்கள் அச்சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| வாரத்திற்கு 5 நாள் சேவை செய்ய இடமளிக்கப்பட்டுள்ளது. | செய்யவேண்டும் என்பது அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரசியலமைப்பு நிறுவனங்களில் செயற்படுத்தப்படுவதில்லை 5 நாள் சேவை காலத்தினுள் தேநீர் ஓய்வு மற்றும் பகல் உணவு குறித்து ½ மணித்தியாலத்திற்கு குறைவான காலம் எடுத்து மிகுதி காலத்தை சேவைக்கு ஒதுக்குவது மூலம் வார வேலை நாட்கள் 5 இல் சனிக்கிழமை ½நாளுக்குரிய வேலை அளவு நிறைவேற்றப்படுகிறது. அதற்கமைய சனிக்கிழமை முழுநாள் குறித்தும் மேலதிக நேர கோடுப்பனவு செய்யப்படும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

மீளாய்வாண்டிற்கான தொகுதியின் செயற்பாட்டு விளைவு ரூபா 14,848 மில்லியன் மற்றும் சபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 14,851 மில்லியன் ஆன இலாபமொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் தொகுதியின் மற்றும் சபையின் இலாபம் முறையே ரூபா 17,153 மில்லியன் மற்றும் ரூபா 16,828 மில்லியன் ஆகும். அதற்கமைய தொகுதியின் மற்றும் சபையின் நிதி பெறுபேறு முறையே ரூபா 2,305 மில்லியன் மற்றும் ரூபா 1,977 மில்லியன் ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் வரி வீதங்களின் அதிகரிப்பு காரணமாக சபையின் வரி செலவு ரூபா 689 மில்லியனால் அதாவது நூற்றுக்கு 25 சதவீதத்தினால் அதிகரித்தமையானது பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1995 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வரும் உரிமை கோரப்படாத மரண நலன்கள் ரூபா 12,475,760 மற்றும் 2001 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டுவரப்படும் நிறுத்திவைக்கப்பட்ட நலன்கள் ரூபா 7,803,642 மற்றும் கோரப்படாத நலன்கள் ரூபா 3,926,732 என்பவற்றின் மொத்தம் ரூபா 24,206,134 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கும் உரிய உறுப்பினர்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 முதல் 4 மாதங்களினுள் 05 பேருக்கு மரண நலன்கள் கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும் அத்தினத்திற்கு உரிமைக்காரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 12,380,049 ஆகும். உரிமையாளர்கள் 91 பேருக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்ட நலன்கள் ரூபா 3,634,767 அக்காலத்திற்குரிய நலன்கள் ஆக செலுத்தப்பட்டிருந்ததுடன், 2019.04.30 திகதிக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதி ரூபா 4,168,874 ஆகும்.<br><br>கோரப்படாத நலன்கள் கணக்கின் (Return Benefits - Welfare) விண்ணப்பதாரிகள் 101 பேருக்கு மத்தியில் ஒரு நலனாளிக்காக ரூபா 99,975 (2019 ஜனவரி மாதம் முதல் 2019 ஏப்ரல் 30 வரை) மீண்டும் செலுத்தப்பட்டிருப்பதுடன் செலுத்தப்படாத நலன்கள் மேலும் 2019.04.30 திகதிக்கு கொடுக்க வேண்டிய பெறுமதி ரூபா 988,873 ஆகும். | தீர்க்கப்படாது காணப்படும் உரிமை கோரப்படாத மரணாதார நலன்கள், நிறுத்தி வைக்கப்பட்ட நலன்கள் மற்றும் கோரப்படாத நலன்கள் வேறு வேறாக இனங்காணப்பட்டு தீர்ப்பதற்கு அவசியமான நடைமுறைகளை அமைப்பது முகாமைத்துவதின் கடமையாகும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2012 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட முதலீட்டு கொள்கை வெளிப்படுத்தலுக்கு அமைய அரச உண்டியல்களில் முதலீடு நூற்றுக்கு 87 சதவீதத்தினாலும் அதிகபட்ச பங்கு முதலீடு நூற்றுக்கு 06 சதவீதத்தினாலும் வேறு நிலையான பிணை மற்றும் குறுங்கால பத்திரங்களில் முதலீடு நூற்றுக்கு 07 முதலீட்டு தொகுதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் முதலீட்டு வெளியீடு தொடர்பான முறையான ஆய்வு மற்றும் சீர்திருத்தம் செய்யாது அரச பிணைகளில் முதலீடு 2016 ஆம் ஆண்டின் பின் குறைவடைந்த போதிலும் அதற்கு பதிலாக நிலையான வைப்பு முதலீடு அதிகரித்திருந்தது. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பிணை முதலீடு முறையே நூற்றுக்கு 86, நூற்றுக்கு 79 மற்றும் நூற்றுக்கு 76 ஆக இருந்ததுடன் வேறு நிலையான பிணைகளில் முதலீடு முறையே 8 சதவீதம், 15 சதவீதம், 19 சதவீதம் ஆக இருந்தது. அதற்கமைய குறுங்கால முதிர்வுக்காலத்தினையுடைய பிணைகளில் முதலீடு அதிகரிப்பதும் குறைந்த அபாயமுள்ள அரச பிணைகளில் முதலீடு குறைவதும் முழு முதலீட்டு தொகுதியின் அபாயம் அதிகரிக்க காரணமாகக் கூடும் என அவதானிக்கப்பட்டது. | சபையினால் முறையான முதலீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. 2012 இன் என்பதுடன் அது பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய அரச வங்கிகளின் நிலையான வைப்புக்களில் செய்யப்பட்ட முதலீடு, முதலீட்டுக்கமைய அரச வங்கிகளின் நிலையான வைப்புக்களில் செய்யப்பட்ட முதலீடு, முதலீட்டுக் கொள்கையில் நூற்றுக்கு ஐந்து பங்கிற்கு மேலதிகமாக கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2017 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் விசாலமான அரச வங்கி மூன்றில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வது பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட எல்லையினுள் ஆகும். அதற்கமைய நூற்றுக்கு 87 எனும் குறைந்த சதவீத அரச பிணை மற்றும் அரச வங்கிகளில் நிலையான வைப்புக்களின் மொத்தம் என கொள்ளலாம்.<br><br>முதலீட்டுக் கொள்கை அனுமதிக்கப்பட்டது. பணிப்பாளர் சபையினால் ஆகும். காலத்தின் தேவை காரணமாக அதனை திருத்தம் மேற்கொள்வதும் பணிப்பாளர் அனுமதியுடனே ஆகும். பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் முதலீட்டு கொள்கைகளுக்கு செய்யப்படும் திருத்தங்களுக்கு அமைய செய்யப்படும் முதலீடு, முதலீட்டுக் கொள்கைக்கு அமைய செய்யப்படும் முதலீடு என இனங்காணப்பட வேண்டும். | முறையான முதலீட்டுக் கொள்கையொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் முதனிலை மற்றும் இரண்டாம் நிலை சந்தை மூலம் விலைக்கு வாங்கப்படும் திறைசேரி பிணை ‘‘முதிர்ச்சியடையும் வரை தக்க வைத்திருக்கப்படும் பிணை’’ என வகைப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்படுவதால் அவை இரண்டாம் நிலை சந்தை மூலம் விற்கப்படுவதால் பெறக்கூடிய நிதி அனுகூலம் பெறுவது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. | நிதியத்திற்கு உள்ளது நீண்டகால நோக்காகும். அதற்கமைய பிணைமுறி முதிர்வடையும் வரையிலும் வைத்திருப்பதன் மூலமம் கூடிய வட்டி விகிதத்தினை சபை பெற்றுக்கொள்ளும். கூடிய வட்டியுடன் பிணையை விற்பதன் மூலம் மூலதன இலாபத்தை ஈட்டுவதெனில் இந்த வட்டி வீதத்தை விட சந்தை வட்டி வீதம் குறைய வேண்டும். அவ்வாறு வட்டி வீதம் குறைந்த சந்தர்ப்பங்களில் மட்டும் இலாபம் ஈட்டுவதற்காக விற்கப்பட வேண்டும்.<br><br>அவ்வாறு இலாபம் பெறப்பம் ஆனால் விற்பனையால் கிடைக்கும் நிதி, மீண்டும் குறைந்த வட்டி வீதத்துடனான பிணைகளில் உடனடியாக முதலீடு செய்யப்பட வேண்டும் இவ்வாறான நிலைமை தொடர்ந்து உருவாகினால் நிதியத்தில் மீறப்படுவது குறைந்த வட்டி வீதத்துடனான பிணைகள் மட்டுமே ஆகும். ஏதேனும், உபாயமார்க்க சந்தர்ப்பங்களில் மட்டும் அவ்வாறு விற்பது தவிர்த்து சதவீதமாக நோக்குகையில் தொடர்ச்சியாக இதை செய்வது பொருந்தாத காரியமாகும். | திறைசேரியன் பிணைமுறிகளில் ஒரு பகுதி இரண்டாம் நிலை கொடுக்கல் வாங்கல்களுக்காக தக்கவைத்துக் கொள்வதன் மூலம் அவற்றை விற்பனை செய்வதன் மூலம் நிதி நலன்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் அரசின் பிணையங்களில் நிதியம் முதலீடு செய்யும் பிரதான நிறுவனமாக இருந்தும் பிணையங்களின் ஏலவிற்பனைகளில் நேர் கொள்வனவு வசதிகள் (Direcct Bidding Facility) 2018 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு பெறப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான மத்திய வங்கியின் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் Direct Biddy Facility பெற்றுக்கொள்ள தேவையான சூழலை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உடனடி விலைமனு முன்வைக்கும் வசதியை பெறுவதன் மூலம் சபைக்கு கூடிய நன்மைகளை நடவடிக்கைகளை எடுத்தல். |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டின் பின்னர் சபையினால் திறைசேரி முறி இரண்டாம் நிலை சந்தை கொடுக்கல் வாங்கல்களில் தவிர்க்கப்பட்டிருந்ததுடன் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீண்டும் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கு உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. | அதற்கமைய உரிய ஊழியர்களை பதவியுயர்த்துவதற்கு தேவையான அனுமதியை பெறுவதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதிக்கு முன்வைத்திருந்தாலும் இதுவரை தேவையான பொருத்தியவாறான | திறைசேரி பிணைமுறிகளை இரண்டாம் நிலையில் கொமுக்கல் வாங்கல்களுக்காக மீள நுழைவடைதல் மற்றும் அதற்குரிய தொழில்நுட்ப வசதிகள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் |

| | | |
|---|---|---|
| இதனால் மேலதிக நிதியை முதலீடு செய்வதில் சிக்கலான நிலைமை காணப்படுவதாகவும் அதனால் முதலீட்டு தொகுதியை ஒழுங்கமைப்பதில் குறைந்த அபாயமுள்ள அரச முதலீடு செய்யும் வாய்ப்பு இல்லாது போனதாகவும் தெரிய வந்துள்ளது. | அனுமதி கிடைக்கவில்லை. மேலும், கடந்த காலத்தைப் போல அல்லாது தற்போது மத்திய வங்கி மூலம் அனைத்து மாதங்களிலும் முதனிலை சந்தையின் முறிகள் வெளியிடப்படும். அதற்கமைய உடன் முதனிலை சந்தை மூலம் முறிகளில் முதலீடு செய்யும் வாய்ப்பு விரிவிடைந்துள்ளது. | மனிதவள அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 வாகனக் கட்டமைப்பின் முகாமைத்துவம்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதியத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக முறையான பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாது மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி 2016 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திலேயே வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்டிருந்தது. அதற்கமைய அவ்விரு வருடங்கங்களுக்காக முறையே வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 16 மற்றும் 15 வாகனங்களுக்காக முறையே ரூபா 8,386,279 மற்றும் ரூபா 7,683,335 செலுத்தப்பட்டிருந்தது. | 10 வருடங்களுக்கு மேல் பழமையான பாவிக்கப்பட்டுக் கொண்டிருந்த 07 வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. அதனால் நில வாகனங்களை தற்காலிக வாடகை அடிப்படையில் முடிவு செய்யப்பட்டதுடன் அதனை வாகனங்கள் தொடர்பான நிரந்தர முடிவொன்று கிடைக்கும் வரை மட்டும் நடைமுறைப்படுத்துவது சபையின் எண்ணமாகும். அதற்கமைய பணிப்பாளர் சபையின் 2016.01.28 திகதியிட்ட பத்திரம் இலக்கம் 652 இன் கீழ் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெறுவது குறித்து அனுமதி பெறப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய, குறைந்த விலைக்கு வாகனங்களை வழங்கும் வாகன ஒப்பந்தக்காரர் மூவரிடமிருந்து விலைமனு கோரப்பட்டதுடன், அதில் எமது தேவைக்கேற்றவாறு குறைந்த விலைமனு முன்வைக்கப்பட்டட விலைக்கு வாகனங்கள் வாடகைக்கு பெறப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் சபையின் தேவைக்கு அமைய வாகனங்கள் சொந்தமாக வாங்கப்படும் வரை மிகக்குறைந்த விலையில் ஒரு சில தடவைகள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டது. எதுவரையானாலும், சபையின் | சபையின் சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது அரச பெறுகை வழிகாட்டிகள் குறிப்பிட்ட முறைமைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய காலத்தில் பெறுகை நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தல். |

அனைத்து வாகன தேவைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் வாடகை அடிப்படையில் வாகனங்களை பெறுவது முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டளவில் இருந்து கூட்டிணைந்த திட்டத்திற்கு அமைய தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலம் குறிக்கோளிட்டபடி தற்காலத்திலுள்ள கணக்கு முகாமைத்துவ முறை மற்றும் மற்றைய மென்பொருள் முறைமைகள் பற்றி கற்று புதிய மென்பொருள் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வது மற்றும் அபாயங்களை தவிர்க்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் எனது காரியங்கள் 2018 ஆம் ஆண்டு முடிவடையும் போது செய்யப்பட்டிருக்கவில்லை. | கிட்டத்தட்ட 18 வருடங்கள் பழைமையான இப்போது காணப்படும் கணனி முறைமை எவ்வகையில் மாற்றப்பட வேண்டும் என ICTA நிறுவனம் நடத்திய வியாபார முறைமையை (Business Process Improvement Study) விருத்தி செய்யும் கல்விக்கு பின்னர் நடத்துவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. ஆதலால் கணனி முறைமையை மாற்றியமைப்பது மற்றும் விருத்தி செய்தல் 2016 ஆம் ஆண்டில் நடத்த முடியவில்லை.<br><br>இக்கல்வியை ICTA மூலம் MG Consultant நிறுவனத்தால் நடத்தி 2018 நடுப்பகுதியில் முடிக்கப்பட்டது. அதற்குப் பின் புதிய கணனி முறையை நிர்மாணித்தல் ICTA மூலம் INNOVA நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருப்பதுடன், அந்நடவடிக்கைகள் இப்போது விரைவாக நடைபெற்று வருகின்றது.<br><br>அதற்கமைய 2020 ஆம் ஆண்டில் புதிய தொழில்நுட்பத்திற்கு பொருத்தக்கூடியவாறு சபையின் அனைத்து | கூட்டிணைந்த திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கம் மற்றும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வினைத்திறனான மற்றும் உற்பத்தி திறனான முறைகளை அமைக்க வேண்டியுள்ளது. |

| | | |
|---|---|---|
| | வசதிகளுக்கும் ஏற்றவாறு அரசின் முழு அங்கீகாரத்துடன் கணனி முறைமை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் நடைபெற்ற வருகின்றன.<br><br>மேலும், அபாயங்களை தவிர்க்கும் திட்டம் 2016 ஆண்டினுள் நடைமுறைப்படுத்த முடியாமல் போனாலும் புதிய கணனி முறைமைக்கு பொருந்தக்கூடியவாறு அபாயங்களை குறைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் 2019/2020 ஆண்டுகளில் தொடங்கப்பட்டது. | |

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் சுய தொழில் புரிவோர் 880 பேரை உறுப்பினர்களாக்கிக் கொள்ள திட்டமிட்டிருந்தாலும் உறுப்பினர்களாக்கப்பட்டது சுயதொழில் புரிவோர் 354 பேர் மட்டுமே. | செயற்திட்டத்திற்கு அமைய எமது சட்டத்திற்கமைய சுயதொழில் மற்றும் ஆட்சேர்ப்பது குறித்து திட்டமிடப்பட்டிருந்தாலும் அங்கு சுயமான உறுப்பினராக உள்வாங்கப்பட்டது மிகக் குறைந்த அளவினராகும். 2019 ஆம் ஆண்டில் இந்த ஆட்சேர்ப்பை வினைத்திறனாக்கப்பட்டதுடன் யூன் 30 ஆம் திகதிக்கு உறுப்பினர் 668 பேர் உட்சேர்க்கப்பட்டனர். எதிர்வரும் காலங்களில் கூடியளவானவர்களை உள்வாங்க நடவடிக்கைகளை தயாரித்து வருவதாக தெரிவிக்கின்றேன். | செயற்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு உரியவாறான நடைமுறைகளை முன்னெடுத்தல் வேண்டும். |

**4.3 அரசாங்க கணக்குகள் குழுவின் பரிந்துரைகள் மற்றும் தற்போதைய நிலமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபன சட்டத்திற்கு அமைய சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சபையின் தலைவரே ஆகும். எப்படியிருப்பினும் நிதி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிறுவனம் என்ற வகையில், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி அதன தலைவரே இருக்க வேண்டும் என ஊழியர் நம்பிக்கை பெறுப்பு நிதிய சட்டத்தின் 5(2) ஆம் பிரிவினை சீர்திருத்த வேண்டியிருப்பதால் 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி நடைபெற்ற பொது வியாபாரம் தொடர்பான கணக்கு சபையின் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அப்படியானாலும் 2018 ஆம் ஆண்டு முடிவடையும் போதும் சட்டத்திற்கு அவசியமான திருத்தங்களை செய்ய சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்திற்கு அவசியமான காலத்துக்குரிய திருத்தங்களை செய்ய சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2018 ஆம் ஆண்டின் சபையின் செயற்திட்டத்துடன் முன்வைக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு அமைய, வரிசைப்படுத்தப்பட்ட பங்கு, வரிசைப்படுத்தப்படாத பங்கு மற்றும் நிரந்தர வருமானத்துடன் கூடிய முதலீடு தொடர்பாக பரிசீலனை செய்ய திட்டமிட்டிருந்தாலும், மீளாய்வாண்டினுள் அந்நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவில்லை. | முந்திய கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பங்களிப்பு தொகையை சேகரித்தல் மற்றும் வங்கியிலிடுதல் பிரதேச காரியாலய கணக்காய்வு, மாதாந்த வங்கி இணைக்கக்கூற்று, பங்களிப்பு மற்றும் மிகை அறவீட்டு வருமான முன்னேற்றம் 2017, வருடாந்த பொருள் கணக்கெடுப்பு 2016, வாகனம் மற்றும் மோட்டார் | செயற்திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை செயற்படுத்த உள்ளக கணக்காய்வு பிரிவு மூலம் வினைத்திறனான மற்றும் உற்பத்தி திறனான வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சபையின் திட்டத்திற்கமைய | சைக்கிள் கொள்வனவு | |

| | |
|---|---|
| உள்ளக கணக்காய்வு பிரிவினால் சபையின் பெறுகை நடவடிக்கைகள் வாகன சீரமைப்பு மற்றும் கட்டிட வாடகை தொடர்பாக பரிசீலனை செய்ய மற்றும் அபாய மதிப்பீடு செய்யும் பதிவை கொண்டு நடாத்த திட்டமிட்டிருந்தாலும் திட்டமிட்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்து கடன் எனும் கணக்காய்வுகள் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றுள்ளன. வரிசைப்படுத்தப்பட்ட மற்றும் வரிசைப்படுத்தப்படாத பங்கு தொடர்பான கணக்காய்வு 2019 ஆம் ஆண்டில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. அபாய முகாமைத்துவம் தொடர்பாக அபாய முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டுள்ளதுடன், அதற்கமைய எதிர்கால நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. |

**4.5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், சபையினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இது தொடர்பில் ஆராய்ந்தவாறு உள்ளதுடன், எதிர்காலத்தில் சபைக்குரிய இலக்குகளை இனங்காணப்படும் | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் செயற்பட வேண்டியமை. |